## வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதி -2013

வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதியின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஔஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் 2004 யூன் 16 இல் கைச்சாத்திடப்பட்ட 2080 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் iv ஆம் உறுப்புரையின் 4.06 (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

வீதிச் செயற்திட்டத்தைத் தயார்படுத்தலுக்கான வசதியின் கடன் உடன்படிக்கையின் படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கை அரசாங்கம் தனது வீதி வலையமைப்பை வினைத்திறனாக விருத்திசெய்வதற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,969 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,476.75 மில்லியன் அல்லது 75 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டமானது பின்வருவன உள்ளடங்கலாக கடன்பெறுநரிற்கும் அதன் வீதி முகவர்களிற்கும் வீதி செயற்திட்ட தயார்படுத்தல் நடவடிக்கைகளை நடாத்துவற்காக நிதியினை வழங்கும்.

i. சுற்றுச்சூழல் மற்றும் சமூக மதிப்பீடு, மீள்குடியேற்ற திட்டங்கள், விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி ஆவணங்கள் என்பன உள்ளடங்கலாக சாத்திய வள கற்கைகள் தயாரிப்பதற்கான உதவி;

ii. கேள்வி மதிப்பாய்வு மற்றும் ஒப்பந்த பேரம்பேசல்களில் உதவி புரிதல் ; மற்றும்

iii. எந்தவொரு அரச – தனியார் பங்குபற்றல் (பிபிபி) உப செயற்திட்டங்களிற்காவும் ஏதாவது சலுகை உடன்படிக்கைகள் மற்றும் பேரம்பேசல்களை தயாரித்தல்.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2004 செப்தெம்பர் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென

பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக்காலம் 2014 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப்

பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கடப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கடப்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 52,157,908 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,905,547,014 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| செலவினத்தின் வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம். |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **உபகரணங்கள்** | | | |
| பொதி - II (ஆலோசனை) | (1,451,117)* | (1,680,028) | 2,251,781 |
| **நடைபெறும் வேலைகள்:- (செயற்திட்ட செலவினம்)** | | | |
| பொதி - II | 4,085,187 | 4,372,793 | 119,425,923 |
| கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் | (35,909)** | (132,547) | 6,648,420 |
| மீளளிக்கப்படாத கேள்வி வைப்புகள் | - | - | (4,591,646) |
| **உசாத்துணை** | | | |
| பொதி - I | - | - | 399,531,991 |
| பொதி - II | - | - | 410,811,723 |
| பொதி 1 | - | 258,100 | 169,454,270 |
| பொதி V | 143,323 | 3,020,654 | 236,668,633 |
| மேலதிக நிதியளிப்பிற்கான வீதிப் பொதிகள் | 10,222,426 | 185,113,251 | 195,335,677 |
| தனிப்பட்ட மதியுரைஞர்-''ஏ'' | - | - | 4,045,039 |
| தனிப்பட்ட மதியுரைஞர்-''பீ'' | 312,667 | - | 312,667 |
| வெள்ளச் சேத மதிப்பீடு | - | - | 5,106,022 |

| | | | |
|---|---|---|---|
| மதியுரை சேவைகள் - கடஹிர மற்றும் பொறியியலாளர்கள் சர்வதேசம் | 38,881,331 | - | 38,881,331 |
| மதியுரை சேவைகள் - யாழ்ப்பாணம் | - | 4,533,449 | 91,768,957 |
| மதியுரை சேவைகள்- 400 கிமீ | - | 53,880,514 | 177,097,420 |
| கொள்வனவு மதியுரை | - | - | 14,947,328 |
| தயார்படுத்தல் வேலை – வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் | - | - | 902,065 |
| தயார்படுத்தல் வேலை – கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச அவசரச் செயற்திட்டம் | - | - | 854,701 |
| வட்டிக் கட்டணங்கள் | - | 6,672,823 | 36,094,712 |
| | 52,157,908 | 256,039,009 | 1,905,547,014 |

* உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு (MLG&PC) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) என்பவற்றிற்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் பெறுமானத்தேய்வின் காரணமாக.

** கட்டுநிதியின் மீள்மதிப்பீட்டிலுள்ள சீராக்கல் காரணமாக

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

**கட்டுநிதி கணக்கு இல 5930**

| ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|

| | | |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 9,996 | 1,271,147 |
| கூட்டு:- மீள்நிரப்பல்கள் | இல்லை | இல்லை |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 35,909 |
| | ------------------- | ------------------- |
| | 9,996 | 1,307,056 |
| கழி: பற்றுதல்கள் | இல்லை | இல்லை |
| | ------------------ | ------------------- |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 9,996 | 1,307,056 |
| | ========= | ========== |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பை நோக்கிய தெற்கு நெடுஞ்சாலை விரிவாக்கல் செயற்திட்டதிற்கான மதியுரைஞர் (SHETC) உடன்படிக்கையின் 26.1 ஆம் இலக்க ஒப்பந்த பொது நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வாடிக்கையாளருக்கு வெளியீட்டு அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேந்தலைக் கிரயமாக ரூபா 96,589 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குறித்த செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கலை உறுதிப்படுத்துவதற்கு மாதந்த, காலாண்டு, வருடாந்த நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற முழுச் செயற்திட்ட காலத்தையும் மேவுவதற்கு விரிவான ஒட்டுமொத்த திட்டம் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், முழுமையான செயற்திட்ட காலத்திற்காகவும் அத்தகைய திட்டமொன்று செயற்திட்ட அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அடையவேண்டிய இலக்குகளுடன் பிரதான பதவியணியின் பொறுப்புக்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான பாதீட்டு ஒதுக்கீடுகள் என்பன தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, திருத்தங்களை மேற்கொள்வதற்காக செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தமான செயன் முன்னேற்றம் மற்றும் அவசியமான மாற்றங்களை செய்யும் நோக்கிலும் முறைப்படி மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. சில நடவடிக்கைகளின் செயன் முன்னேற்றம் மற்றும் சிக்கலான விடயங்கள் மீளாய்வுக்

கூட்டத்திலும் செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டதின் செயலாற்றல் முறைப்படி கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப் பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப் பட்ட நிதிகள் | சதவீதமாக ஆண்டிற்கான பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | % |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 15 | 1,476.75 | 38.72 | 38.72 | 1,517.52 | 100 |
| இலங்கை அரசாங்கம் | 05 | 492.25 | 30.00 | 23.00 | 383.49 | 77 |
| மொத்தம் | 20 | 1,969.00 | 68.72 | 61.72* | 1,901.01** | |

* ரூபா 35,909 தொகையான முற்கொடுப்பனவுகளை உள்ளடக்கியமை மற்றும் ரூபா 9,525,787 தொகையான பொறுப்புக்களை தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வித்தியாசப்படுகின்றது.

** ரூபா 1,509,557 தொகையான முற்கொடுப்பனவுகளை உள்ளடக்கியமை மற்றும் ரூபா 4,860,162 தொகையான பொறுப்புக்களை தவிர்தமை மற்றும் ரூபா 1,177,592 தொகையான மானியங்களை உள்ளடக்கியமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வித்தியாசப்படுகின்றது.

## 6.2 நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

மாகாண வீதி முகவர்களின் பங்குபற்றலுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு என்பன நவீன மற்றும் வினைத்திறனான வீதி வலையமைப்பிற்கான தேவைகளை நிறைவேற்றுவதற்காக புனரமைப்புச் செய்து மேம்படுத்த வேண்டிய வீதிகளை இனங்கண்டிருந்தன.

மொத்தம் 2,200 கிலோமீற்றர் நீளமான தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மொத்தம் 2,900 கிமீ நீளமான மாகாண வீதிகள், சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விரிவான வடிவமைப்பு என்பவற்றிற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 3,141 கிமீ நீளமான தேசிய வீதிகள் மற்றும் 3,119 கிமீ நீளமான மாகாண வீதிகள் என்பவற்றின் மதியுரை சேவைகளிற்காக ரூபா 1,753.43 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, 4,940 கிமீ தொடர்பான சாத்தியவள ஆயவு மற்றும் விரிவான வடிவமைப்பு என்பன 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒப்பந்தத்தின் பௌதீக செயன் முன்னேற்றம் மற்றும் ஏற்பட்ட திரட்டிய செலவினம் என்பவற்றின் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| பொதி | வழங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி | ஒப்பந்தத்தின் படி வீதியின் நீளம் | பூர்த்தியாக்கப்பட்ட வீதியின் உள்ளபடியான நீளம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் |
|---|---|---|---|---|
| ---------------- | ----------------- | ------------------ | ------------------------ | ---------------------- |
| | ரூபா மில் | கிமீ | கிமீ | ரூபா மில் |
| பொதி I | 475.80 | 1,500 | 27- எவ்எஸ்<br>157- டிடி | 268.7 |
| பொதி II | 362.17 | 2,400 | 2,400 | 410.8 |
| பொதி I பீ | 100 | 351 | 347 | 130.8 |
| பொதி I சீ | 160 | 664 | 664 | 169.4 |
| பொதி வீ மற்றும் வீஏ | 156.19 | 436 | 436 | 158.3 |
| பொதி வீபீ | 70.36 | 77 | 77 | 78.2 |
| பொதி எக்ஸ்-என்எச் | 170.20 | 113 | 113 | 185.1 |
| பொதி எக்ஸ் - மாகாண வீதிகள் | | 69 | 69 | |
| யாழ்ப்பாணம் | 91.27 | 250 | 250 | 91.8 |

| | | | | |
|---|---|---|---|---|
| கிளிநொச்சி / முல்லைத்தீவு | 167.44 | 400 | 400 | 177.0 |
| | 1,753.43 | 6,260 | 4,940 | 1,670.1 |